GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No.

**TA4A**

**6317–24**

(For the candidates admitted from 2017-2018 to 2022-2023)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three – year Regular Course)

Second Year – Fourth Semester

## LAW OF EVIDENCE

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What do you mean by the Law of Evidence? State the underlying principles of the Law of Evidence.

   சாட்சிய சட்டம் என்றால் என்ன? சாட்சிய சட்டத்தின் அடிப்படை கோட்பாடுகளை குறிப்பிடுக.

2. "Anything said, done or written by anyone of the conspirators is a relevant fact as against all the other conspirators" – Explain the statement with relevant case laws.

   "சதிகாரர்களில் யாரேனும் ஒருவரால் சொல்லப்பட்ட, செய்யப்பட்ட அல்லது எழுதப்பட்ட எதுவும் மற்ற அனைத்து சதிகாரர்களுக்கு எதிராக ஒரு தொடர்புடைய பொருண்மையாகும்" – மேற்கண்ட வாக்கியத்தை தகுந்த வழக்குகளுடன் விளக்கவும்.

3. What is meant by burden of proof? How the burden of proof shifts in the course of a suit or prosecution?

   மெய்ப்பிக்கும் சுமை என்றால் என்ன? உரிமையியல் வழக்கு அல்லது குற்றவழக்கு நடைபெறும் பொழுது மெய்ப்பிக்கும் சுமை எவ்வாறு இடம் மாறுகிறது?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain that the Law of Evidence is "Lex Fori", discuss with Bhopal gas leak case.

   சாட்சியச் சட்டம் வழக்காடும் நாட்டின் சட்டமாகும் என்பதை போபால் வாயு கசிவு வழக்குடன் விளக்கவும்.

5. Distinguish between Admission and Confession.

ஒத்தேற்புரை மற்றும் குற்றஏற்புரை வேறுபடுத்துக.

6. Discuss briefly the Doctrine of "Estoppel".

"முரண்தடை", கோட்பாடு குறித்து சுருக்கமாக விவாதிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Relevant fact

தொடர்புடைய பொருண்மை

(b) Circumstantial evidence

சூழ்நிலை சான்று

(c) Res Gestae

ஒன்றிய செயல்

(d) Dying declaration

மரண வாக்குமூலம்

(e) Hostile witness

பிறழ் சாட்சி

(f) State of Uttar Pradesh v. Deoman Upadhyaya (AIR 1960 SC 1125)

உத்திரபிரதேச மாநிலம் எதிர் தியோமன் உபாத்யாயா (AIR 1960 SC 1125)

(g) Leading question

விடைபொதி வினா

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' is accused of a crime. It is shown that soon after the crime he is absconding from his place. Is this fact relevant? How?

'A' என்பவர் குற்றம் செய்ததாக குற்றம் சாட்டப்படுகிறார். அவர் குற்றம் நிகழ்ந்தவுடன் அவருடைய இடத்திலிருந்து தலைமறைவாகிவிட்டதாக காட்டப்படுகிறார். இந்த பொருண்மை தொடர்புடையதா? எவ்வாறு?

9. 'A' a married woman has committed suicide after leaving a note that her husband and his relatives subjected her to cruelty. Decide the relevancy of the suicide note.

திருமணமான 'A' என்கிற பெண், தன்னுடைய கணவரும் அவருடைய உறவினர்களும் தன்னை கொடுமைப்படுத்துவதாக குறிப்பு ஒன்றை எழுதிவிட்டு தற்கொலை செய்துகொள்கிறார். அந்தத் தற்கொலைக்கான குறிப்பின் தொடர்புடைமை குறித்து முடிவு செய்க.

10. 'A' agreed in writing to sell a cow to 'B' for Rs. 20,000/- or Rs. 30,000/-. 'B' wants to lead evidence to show the price as Rs. 20,000/-. Can he do so?

ரூ. 20,000/- அல்லது ரூ.30,000/–த்திற்கு ஒரு பசுவை 'B'–க்கு விற்க எழுத்து மூலம் 'A' ஒப்புக் கொண்டார். விலை ரூ. 20,000/- தான் எனக்காட்ட சாட்சியம் கொடுக்க 'B' வேண்டினார். அவரால் அவ்வாறு செய்ய முடியுமா?

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA4B** **6273–24**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

ADMINISTRATIVE LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Everything must be done according to Law". Explain this statement with the help of Dicey's "Rule of Law".

   "அனைத்துச் செயல்களும் சட்டத்தின்படி தான் நிறைவேற்றப்பட வேண்டும்". இக்கூற்றினை டைசியின் 'சட்டத்தின்' ஆட்சி'க் கோட்பாட்டின் உதவியுடன் விவரிக்கவும்.

2. What is the extent of permissible delegation of legislative power? Discuss with the aid of cases.

   சட்டவிதியாக்க அதிகார ஒப்படைவு எவ்வளவு இருக்கலாம்? வழக்குகளின் உதவியுடன் விவாதிக்கவும்.

3. Explain the principle of "Audi Alteram Partem" referring to decided cases.

   "இரு தரப்பினரையும் கேட்டல்" என்ற கோட்பாட்டை முடிவுற்ற வழக்குகளைக் கொண்டு விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the doctrine of Estoppel with decided cases.

   முரண்தடை கோட்பாட்டை முடிவுற்ற வழக்குகளின் உதவியுடன் விளக்குக.

5. Examine the contractual liability of the state in India by referring to decided cases.

முடிவுற்ற வழக்குகளின் உதவியோடு இந்திய அரசின் ஒப்பந்த பொறுப்பு நிலையை ஆய்வு செய்க.

6. What are the various kinds of judicial remedies available to a person affected by Administrative actions? Explain with decided cases.

நிர்வாகத் துறையின் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கக் கூடிய பல்வேறு வகையான நீதிமுறை தீர்வழிகள் யாவை? தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Conseil de etat.

கன்சில் தி இதாத்.

(b) New Despotism.

புதிய ஏதேச்சதிகாரம்.

(c) Procedural Ultra vires.

செயல்முறை வரம்பு மீறல்.

(d) Judicial Review.

நீதிமுறை மறு ஆய்வு.

(e) Air India vs Nargesh Meerza.

ஏர் இந்திய எதிர் நர்கீஸ் மீர்ஸா.

(f) Ouster of Jurisdiction.

அதிகார வரம்பை விலக்கல்.

(g) Writ of Quo Warranto.

தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Santhan was injured by the heap of sand and gravel, left on the road by the road contractor. He filed a suit for damages against the state. Decide citing relevant cases.

சாலை போடும் ஒப்பந்தக்காரரால் சாலையில் போடப்பட்டிருந்த மணல் மற்றும் சரளைக்கல் குவியல் ஒன்றினால் சாந்தன் என்பவர் காயம் அடைந்தார். அரசிற்கு எதிராக இழப்பீடு கோரி அவர் ஒரு வழக்கு தொடர்ந்தார். தொடர்புடைய வழக்குகளை குறிப்பிட்டு தீர்மானிக்கவும்.

9. The Revenue Minister of State Vansi, cancelled Suresh's licence for the lease of certain land. Suresh challenges the decision on the ground that there was political rivalry between him and the minister. Decide.

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியின் குத்தகையைச் சார்ந்த சுரேஷ் என்பவரின் உரிமத்தை வான்சி அரசின் வருமானத்துறை அமைச்சர் தள்ளுபடி செய்தார். தமக்கும் அந்த அமைச்சருக்கும் அரசியலில் போட்டி என்ற காரணம் காட்டி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று சுரேஷ் குற்றஞ்சாட்டினார். தீர்மானிக்கவும்.

10. A committee was constituted by the state government for the purchase of books to the libraries. Mrs. Leelavathi is one of the members of the committee. She recommended the books authored by herself to the Libraries. A petition had been filed to challenge the recommendation of the committee. Decide.

மாநில அரசு நூலகங்களுக்கு புத்தகங்கள் வாங்குவதற்காக ஒரு குழுவை நியமித்தது. அதில் திருமதி லீலாவதி என்பவர் உறுப்பினராக இருந்தார். அவர் எழுதிய நூல்களையே நூல் நிலையங்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. இதை எதிர்த்து மனு ஒன்று தாக்கல் செய்யப்படுகின்றது – தீர்மானிக்கவும்.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
* LIBRARY *

Register No. | | | | | | | | |

**TA4C** 6337-24

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

LABOUR LAW – I

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Give a critical estimate of the machinery provided under the Industrial Disputes Act for the investigation and settlement of Industrial Dispute.

   தொழிற்சச்சரவு சட்டத்தின் கீழ் தொழிற்சச்சரவுகளை விசாரணை செய்யவும் அறுதியிடவும் வழிவகுக்கப்பட்டுள்ள அமைப்புகள் குறித்து ஒரு திறனாய்வு மதிப்புரை தருக.

2. Mention the deductions authorised by the Payment of Wages Act.

   ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட கழிவுகளைக் குறிப்பிடுக.

3. Explain the various salient features incorporated under the Industrial Employment (Standing Orders) Act, 1946.

   1946ம் ஆண்டு தொழிலகப் பணிகள் (நிலையாணைகள்) சட்டத்தின் பல்வேறு சிறப்பியல்புகளை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the difference between registration of Trade Union and recognition of Trade Union.

   தொழிற்சங்கம் பதிவு செய்தல் மற்றும் தொழிற்சங்கம் அங்கீகாரம் ஆகியவற்றின் வேறுபாடுகளை விளக்குக.

5. Discuss the statutory procedure for fixation and revision of minimum wages.

குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்ய மற்றும் மாற்றியமைப்பதற்கு சட்ட ரீதியான நடைமுறைகளை விவாதிக்க.

6. Discuss the procedure for retrenchment order under the Industrial Disputes Act, 1947.

தொழிற்துறை சச்சரவு சட்டம் 1947 கீழ் ஆட்குறைப்பிற்கான நடைமுறையை விவாதிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Public Utility Service

பொது பயன்பாட்டு சேவை

(b) Strike

வேலை நிறுத்தம்

(c) Wage period

ஊதிய காலம்

(d) Dissolution of Trade Union

தொழிற்சங்க கலைப்பு

(e) Certification of Standing Orders

நிலையாணை சான்றளித்தல்

(f) Fair Wage

நியாய ஊதியம்

(g) Disqualification of office bearers of the Trade Union

தொழிற்சங்க நிர்வாகிகளின் தகுதி இழப்பு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. In a leather manufacturing factory the employer declared lay off to his workers. But offered them alternative employment in his another garments factory which is 3 kms away from the main factory. The workers refused to accept the work and claimed compensation for lay off. Decide.

ஓர் தோல் உற்பத்தி தொழிற்சாலையின் நிர்வாகம் தனது தொழிலாளர்களை வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைத்தது. அதற்கு பதிலாக நிர்வாகம் சுமார் 3 கிலோமீட்டர் தொலைவிலிருக்கும் தனது மற்றொரு ஆடை உற்பத்தி நிறுவனத்திற்கு வேலைசெய்யப் பணிக்கிறார்கள். ஆனால் தொழிலாளர்கள் வேலை செய்ய முடியாது என்று கூறி நிறுத்தி வைத்தலுக்கான இழப்பீடு கோருகின்றார்கள். முடிவு செய்க.

9. Ponni Mill had two trade unions. When the members of both the trade unions quarrelled, the personal manager was assaulted by the members. The management of the mill lodged a criminal complaint against the trade union members. Can the trade unions claim immunity from criminal liability.

பொன்னி ஆலையில் இரண்டு தொழிற்சங்கங்கள் இருந்தன. அத்தொழிற் சங்க உறுப்பினர்கள் சண்டையிட்டுக் கொள்ளும் பொழுது ஆலையின் தனி மேலாளர் சிலரால் தாக்கப்பட்டார். ஆலை நிர்வாகம் தொழிற்சங்க உறுப்பினர்களுக்கு எதிராக குற்றப்புகாரை பதிவு செய்தது. தொழிற்சங்கங்கள் குற்றவியல் பொறுப்பிலிருந்து விலக்கு பெற இயலுமா?

10. A workman of an Industry was terminated by the employer of the Industry on the ground of ill health for active duties for a long period. The workman claimed retrenchment compensation. Can he succeed?

தொழிலாளர் ஒருவரை நீண்ட காலத்திற்கு நல்லப் பணியாற்றுவதற்கான ஆரோக்கியம் இல்லை என்பதால் பணியாண்மையர் பணியிலிருந்து நிறுத்தி விட்டர். தனக்கு ஆட்குறைப்பிற்கான இழப்பீடு தரவேண்டும் என்று அந்தத் தொழிலாளர் கோரினார். அவர் வெற்றி பெறுவாரா?

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA4D** **6319–24**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

INTERNATIONAL LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Individuals are the only subjects of International Law". Is this statement correct in contemporary international law sense? Examine.

   "நபர்கள் மட்டுமே சர்வதேச சட்டத்தின் பொருள் ஆவார்கள்". தற்கால சர்வதேச சட்டத்திற்கு இக்கூற்றானது சரியானதா? ஆராய்க.

2. What is "State Succession"? Explain the rights and duties arising out of succession of State.

   "நாடுகளின் இறங்குரிமை" என்றால் என்ன? நாடுகளின் இறங்குரிமையின் மூலம் கிடைக்கக் கூடிய உரிமைகளையும் மற்றும் கடமைகளையும் விளக்குக.

3. Define 'Nationality'. Explain modes of acquiring and losing of nationality.

   "நாட்டுரிமை" வரையறு. நாட்டுரிமையை பெறுவதற்கான மற்றும் இழப்பதற்கான வழிமுறைகளை விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the principal organs of the United Nations.

   ஐக்கிய நாடுகள் சபையின் முதன்மையான அங்கங்களை விவாதிக்கவும்.

5. What is 'Asylum'? Explain different types of asylum.

   'புகலிடம்' என்றால் என்ன? புகலிடத்தின் பல்வேறு வகைகளை விளக்கவும்.

6. Define the term 'Treaty'. Explain the modes of termination of treaties.

'உடன்படிக்கை' வரையறு. உடன்படிக்கைகளை முடிவுக்கு கொண்டு வரும் வழிமுறைகளை விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Modes of recognition

அங்கீகரித்தலின் முறைகள்

(b) General principles of law

பொது சட்டக் கொள்கைகள்

(c) Dualism

இருபொருள்வாதம்

(d) Territorial sea

எல்லையோர கடல்

(e) Island of Palmas case

ஃபால்மாஸ் தீவு வழக்கு

(f) 'Monroe' doctrine

'மண்ட்ரோ' கொள்கை

(g) International court of Justice

பன்னாட்டு நீதிமன்றம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The Government of 'X' is overthrown and rebels establish a new government. Britain continues to recognise the old government but accords de facto recognition to the new government. A suit is filed in Britain by the new government of 'X' against a bank for recovery of some money due to 'X'.
The suit is contested by the old government which claims that the money should belong to it since it is the de jure government and hence the lawful representatives of 'X'. Will 'X' succeed?

'X'—ன் அரசாங்கமானது கிளர்ச்சியாளர்களால் மாற்றப்பட்டு புதிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது. பிரிட்டன் பழைய அரசாங்கத்தை தொடர்ந்து அங்கீகரித்தும் ஆனால் புதியதாக ஏற்படுத்தப்பட்ட அரசாங்கத்திற்கு நிகழ்வுநிலை அங்கீகாரம் அளித்தது. இவ்வாறு இருக்க புதிய அரசாங்கமானது பிரிட்டனில் பழைய அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தக் கோரி ஒரு வங்கிக்கு எதிராக வழக்கு தொடர்ந்தது. இதில் பழைய அரசாங்கமானது, மேற்படி செலுத்த வேண்டிய தொகையானது தங்களுக்கு தான் சொந்தமானது ஏனெனில் 'X' அரசாங்கமானது சட்டப்படியான அங்கீகாரம் பெற்றது. ஆதலால் மேற்படி தொகைக்கு சட்டப்படியான பிரதிநிதியாகும் எனவும் வாதிட்டது. இவ்வழக்கில் 'X' வெற்றி பெற முடியுமா?

9. The diplomat of state "A" was supplying weapons to a banned outfit in violation of local laws, in state "B". When he was caught, he claims diplomatic immunity. Can he succeed?

'அ' நாட்டின் தூதரவு அதிகாரி 'ஆ' நாட்டில் தடைசெய்யப்பட்ட அமைப்பிற்கு ஆயுதங்களை அந்நாட்டிற்கு எதிராக பயன்படுத்த வழங்குகிறார். அப்போது அவர் பிடிக்கப்பட்டார். அதன் பின்னர் தூதாண்மை அதிகாரிகளுக்கு உண்டான தூதாண்மை சிறப்புரிமைகளை கோருகிறார். இதில் அவர் வெற்றி பெறுவாரா?

10. Sriram an Indian Politician to avoid arrest by police authorities takes refuge in a merchant ship of state "Y", which is stationed in territorial sea of India. Can Indian police authorities arrest him?

ஸ்ரீராம், என்ற இந்திய அரசியல்வாதி, அவர் செய்த குற்றத்தில் இருந்து தப்பிப்பதற்கு "Y" நாட்டின் வணிக கப்பலில் அடைக்கலம் புகுகிறார். அவ்வணிக கப்பலானது இந்திய நாட்டின் எல்லையோர கடல் பகுதியில் நிறுத்தி வைக்கப்படுகிறது. இந்திய காவல் துறையினர் அவரை கைது செய்ய முடியுமா?

---